

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கலைஞர் அவர்களின் புகழை போற்றிடும் வகையில் எழுத்தாளர் கலைஞர் குழுவின் சார்பில் "முத்தமிழ் தேர்" என்ற அலங்கார ஊர்தி ஈரோடு மாவட்டத்திற்கு வருகை தந்ததையொட்டி ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட கருங்கல்பாளையம் காமராஜர் அரசு மேல்நிலைப் பள்ளியில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி அலங்கார ஊர்தியை வரவேற்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். நிகழ்வில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் அ. கணேசமூர்த்தி, ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் ஈவிகேஎஸ்.இளங்கோவன், மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், மாநில நிர்வாகிகள் எம்.கந்தசாமி, குறிஞ்சி என்.சிவக்குமார், கே.இ.பிரகாஷ், மாவட்ட பொருளாளர் ப.க.பழனிசாமி, பகுதி கழக செயலாளர்கள் வி.செல்வராஜ், குறிஞ்சி என்.தண்டபாணி, பொ.ராமச்சந்திரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மனசாட்சியாக விளங்கிய முரசொலி மாறன் அவர்களின் 20வது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு காங்கேயம் சட்டமன்ற அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த அவர்களின் திருவுருவப் படத்திற்கு தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். இதில் மாவட்டக் கழக துணைச் செயலாளர் ராசி கே.ஆர்.முத்துக்குமார், காங்கேயம் நகர கழக செயலாளர்கள் வசந்தம் நா.சேமலையப்பன், சபரி எஸ்முருகானந்தன், ஒன்றிய கழக செயலாளர் எஸ்.சந்திரசேகரன், கே.கே.சிவானந்தன், பேரூர் கழக செயலாளர் செண்பகம் பாலு உள்பட மாவட்ட, ஒன்றிய, நகர, வார்டு, கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், தொழுவங்காடு ஊராட்சியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ், ரூ.10.19 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள, புதிய அங்கன்வாடி மையக் கட்டிடத்தினை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் அவர்கள் நேற்று முன்தினம் (24.11.2023) குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தார். உடன் அறந்தாங்கி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.மகேஸ்வரி சண்முகநாதன், அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் சிவக்குமார், வட்டார வளர்ச்சி அலுவலர் குமாரவேலன், ஊராட்சிமன்றத் தலைவர் திருமதி.சுமதி சுரேஷ், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### புதுக்கோட்டை மாவட்டத்தில்

# ரூ.36 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு புதிய கட்டிடங்கள்!

## சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி திறந்து வைத்தார்!

புதுக்கோட்டை, நவ. 26-

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், பகவாண்டிப்பட்டி ஊராட்சி, பகவாண்டிப்பட்டியில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ், ரூ.12 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள, புதிய அங்காடி கட்டிடத்தினையும் மற்றும் கண்டியாநத்தம் ஊராட்சி, கேசராப்பட்டியில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ், ரூ.12 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள, புதிய அங்காடி கட்டிடத்தினையும் மற்றும் ஆலவயல் அரசு மேல்நிலைப்பள்ளியில், நமக்கு நாமே திட்டத்தின்கீழ், ரூ.12 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள, புதிய கூடுதல் பள்ளி கட்டிடத்தினையும், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி 24.11.2023 அன்று திறந்து வைத்தார்.

பின்னர் அமைச்சர் எஸ். ரகுபதி தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் நலனிற்காக எண்ணற்றத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், பொதுமக்களுக்குத் தேவையான குடிமைப் பொருட்கள் தங்களது வீடுகளுக்கு அருகாமையிலேயே கிடைக்கும் வகையில் பல்வேறு புதிய அங்காடிகள் திறக்கப்பட்டு வருகிறது. அந்தவகையில் பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், பகவாண்டிப்பட்டிலும், கண்டியாநத்தம் ஊராட்சி, கேசராப்பட்டியிலும் புதிய அங்காடி கட்டிடங்கள் மற்றும் ஆலவயல் அரசு மேல்நிலைப்பள்ளியில் புதிய கூடுதல் பள்ளி கட்டிடம் திறந்து வைக்கப்பட்டது.

அதன்படி, பகவாண்டிப்பட்டியில் கட்டப்பட்டுள்ள, 13 பொன்னமராவதி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் லிட், புதிய அங்காடி கட்டிடம் திறந்து வைத்ததன் மூலம் பகவாண்டிப்பட்டி, காயாம்புஞ்சை, மைலாப்பூர், அஞ்சுபுளிப்பட்டி, அரியாண்டிப்பட்டி, வலையப்பட்டி, பொன்னமராவதி ஆகிய கிராமங்கள் இந்த அங்காடியின் மூலம் பயன்பெறும். இந்த அங்காடியில் 1,101 குடும்ப அட்டைகள் இடம் பெற்றுள்ளன.

அதேபோன்று, கண்டியாநத்தம் ஊராட்சி, கேசராப்பட்டியில், கட்டப்பட்டுள்ள, MM137 ஆலவயல் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் லிட்., புதிய அங்காடி கட்டிடம் திறந்து வைத்ததன் மூலம் ஆலவயல், கண்டியாநத்தம், செம்மலாபட்டி, தேனூர், நாத்துப்பட்டி, ஆகிய கிராமங்கள் இந்த அங்காடியின் மூலம் பயன்பெறும். இந்த அங்காடியில் 210 குடும்ப அட்டைகள் இடம் பெற்றுள்ளன. இதன்மூலம் இப்பகுதி பொதுமக்கள் நீண்ட தூரம் சென்று குடிமைப் பொருட்கள் பெற்றுவருவது தவிர்க்கப்பட்டு, இனி வரும் காலங்களில் தங்களது வீடுகளுக்கு அருகாமையிலேயே அத்தியாவசியப் பொருட்களை பெற முடியும்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாணவ, மாணவிகளின் நலனிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.அந்த வகையில் பள்ளி உட்கட்டமைப்புகளை மேம்படுத்தி கல்வி கற்கும் ஆர்வத்தினை அதிகரித்து வருகிறார்கள். அதன்படி, புதிய கூடுதல் பள்ளி கட்டிடம் திறந்து வைக்கப்பட்டது. இதன்மூலம் ஆலவயல் அரசு மேல்நிலைப் பள்ளியில், மாணவர்களின் எண்ணிக்கை உயர்வதற்கு வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எனவே தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் செயல்படுத்தப்படும் இதுபோன்ற திட்டங்களை அனைவரும் உரிய முறையில் பெற்று பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் தெய்வநாயகி, பொன்னமராவதி ஒன்றியக்குழுத் தலைவர் சுதா அடைக்கலமணி, பொன்னமராவதி பேரூராட்சித் தலைவர் சுந்தரி அழகப்பன், அறந்தாங்கி சரக துணைப் பதிவாளர் ஆறுமுகப்பெருமாள், பொன்னமராவதி கள அலுவலர் அன்னலட்சுமி, கூட்டுறவு சார் பதிவாளர் எஸ்.சியாமளா,

தலைமையாசிரியர் நவநீத கிருஷ்ணன், செயலாளர் சண்முகசுந்தரம், ஊராட்சி மன்றத் தலைவர் செல்வி முருகேசன், உதவி தலைமையாசிரியர் கணேசன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்கு சம்மன் - சட்ட விரோதம்!

## அமலாக்கத் துறைக்கு எதிராக தமிழ்நாடு அரசு வழக்கு!

புதுடெல்லி, நவ.26 -

மணல் குவாரி விவகாரத்தில் 10 ஐஏஎஸ் அதிகாரிகளுக்கு அமலாக்கத்துறை சம்மன் அனுப்பியதற்கு எதிராக, சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு சார்பில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள மணல் குவாரிகளில், அரசு நிர்ணயித்த அளவைவிட கூடுதலாக மணல் விற்பனை செய்ததாகவும், மணல் ஒப்பந்த குவாரிகளில் வந்த வருமானத்தை சட்டவிரோதமாக பரிமாற்றம் செய்ததாகவும் குற்றச்சாட்டு எழுந்திருந்தது.

இதையடுத்து சட்டவிராத பணப் பரிமாற்றம் சட்டத்தின் கீழ் அமலாக்கத் துறை அதிகாரிகள் கடந்த செப்டம்பர் 12ம் தேதி ஒரே நேரத்தில் புதுக்கோட்டை மாவட்டம் முத்துபட்டினத்தை சேர்ந்த தொழிலதிபர் ராமச்சந்திரன், திண்டுக்கல் ரத்தினம், ரத்தினத்தின் உறவினர் கோவிந்தன், மணல் குவாரி அதிபர் கரிகாலன் ஆகியோரது வீடுகளில் சோதனை மேற்கொண்டனர்.

### மணல் குவாரி

இதேபோல் பொதுப்பணித்துறையில் பணியாற்றி ஓய்வு பெற்ற பொறியாளர் திலகம், நீர்வளத்துறை முதன்மை பொறியாளர் முத்தையா ஆகியோருக்கு சொந்தமான வீடுகள் மற்றும் எழிலகத்தில் உள்ள நீர்வளத்துறை அலுவலகம் என மொத்தம் 34 இடங்களில் அதிரடி சோதனை நடத்தினர். இரண்டு நாட்களுக்கு மேல் நீடித்த இந்த சோதனையில், மணல் குவாரி அதிபர் ராமச்சந்திரன், திண்டுக்கல் ரத்தினம், கரிகாலன் மற்றும் நீர்வளத் துறை அதிகாரிகள் வீடுகளில் இருந்து கணக்கில் வராத பல கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்து ஆவணங்கள், ரூ.12.82 கோடி ரொக்கப்பணம், ரூ.58.86 லட்சம் மதிப்புள்ள 1024 கிராம் தங்க நகைகள் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டது.

### அமலாக்கத்துறை

இந்த சோதனையை தொடர்ந்து 10 மாவட்ட ஆட்சியர்கள், நீர்வளத் துறை முதன்மை பொறியாளர் முத்தையா, ஓய்வு பெற்ற பொதுப்பணித் துறை பொறியாளர் திலகம் ஆகியோரை விசாரணைக்கு ஆஜராகக் கூறி அமலாக்கத் துறை சார்பில் சம்மன் அனுப்பப்பட்டிருந்தது. இந்த சம்மனை தொடர்ந்து நீர்வளத்துறை முதன்மை பொறியாளர் முத்தையா நுங்கம்பாக்கத்தில் உள்ள அமலாக்கத்துறை அலுவலகத்தில் சில முக்கிய ஆவணங்களுடன் நேரில் ஆஜரானார்.

இந்த பின்னணியில் மாவட்ட ஆட்சியர்களுக்கு சம்மன் அனுப்பியதை எதிர்த்து தமிழ்நாடு அரசு சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. அந்த மனுவில் சட்டவிராத பணப்பரிமாற்றத் தடை சட்டத்தில் கனிமவள சட்டம் சேர்க்கப்படாத நிலையில் மாவட்ட ஆட்சியருக்கு சம்மன் அனுப்ப அமலாக்கத்துறைக்கு அதிகார வரம்பு இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மாநில அரசு அதிகாரிகளை துன்புறுத்தும் நோக்கிலும், அரசு நிர்வாகத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் நோக்கிலும், அமலாக்கத்துறை செயல்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கேரள ஆளுநருக்கு எதிராக அம்மாநில அரசு தொடர்ந்த வழக்கு!

# பஞ்சாப் ஆளுநர் வழக்கின் தீர்ப்பை, கேரள ஆளுநர் படித்துப் பார்க்கவேண்டும்!

## உச்சநீதிமன்றம் உத்தரவு!

புதுடெல்லி, நவ. 26-

பஞ்சாப் ஆளுநர் வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பை படித்துப் பார்த்து கேரள ஆளுநர் மசோதாக்கள் மீது முடிவு எடுக்க வேண்டும் என, உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மசோதாக்களுக்கு எப்போது ஒப்புதல் வழங்குவார் என்பது குறித்து ஆளுனர் தரப்பு 29 ஆம் தேதி பதிலளிக்கவும் நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.

எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில், ஆளுநர்கள் மூலமாக ஒன்றிய பா.ஜ.க. அரசு பல்வேறு இடையூறுகளை ஏற்படுத்தி வருகிறது. சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்படும் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் ஆளுநர்கள் காலம் தாழ்த்தி வருகின்றனர். கேரள சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்பட்டுள்ள பல்வேறு சட்ட மசோதாக்களையும், அரசு உத்தரவுகளையும் கிடப்பில் போட்டுள்ள ஆளுநர் ஆரிப் முகமது கானுக்கு எதிராக, அம்மாநில அரசு உச்சநீதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு தலைமை நீதிபதி தலைமையிலான அமர்வு முன் மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, கேரள ஆளுநர் தரப்பில் ஒன்றிய அரசின் அட்டார்ணி ஜெனரல் ஆஜரானார்.

கேரள அரசு சார்பில் ஆஜரான வழக்கறிஞர் கே.கே.வேணுகோபால், 8 மசோதாக்கள் நீண்ட நாள் நிலுவையில் உள்ளதாக தெரிவித்தார்.

முதலமைச்சரும், அமைச்சர்களும் நேரில் விளக்கமளித்த பின்னரும் ஒப்புதல் வழங்காமல் கிடப்பில் போட்டிருப்பதாக குற்றம் சாட்டினார்.

அப்போது, தலைமை நீதிபதி சந்திரசூட் அமர்வு, பஞ்சாப் ஆளுநர் வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பை படித்து பார்த்து கேரள ஆளுநர் மசோதாக்கள் மீது முடிவு எடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டனர். மேலும், மசோதாக்களுக்கு எப்போது ஒப்புதல் வழங்குவார் என்பது குறித்து ஆளுநர் தரப்பு வரும் 29 ஆம் தேதி பதிலளிக்க உத்தரவிட்டு வழக்கை நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

# 12 தமிழக மீனவர்கள் சென்னை திரும்பினர்!

சென்னை, நவ. 26 -

இலங்கை சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட தமிழக மீனவர்களில், 3வது கட்டமாக 12 மீனவர்கள் இலங்கையிலிருந்து நேற்று முன்தினம் காலை சென்னை வந்தனர். தமிழ்நாட்டில் ராமேஸ்வரம், மண்டபம் கடல் பகுதிகளில் மீன் பிடித்துக் கொண்டிருந்த, 64 தமிழ்நாடு மீனவர்களை இலங்கை கடற்படை கடந்த அக்டோபர் மாதத்தில் கைது செய்தது. இதையடுத்து, இலங்கையில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகள், இலங்கை அரசு அதிகாரிகளிடம் பேச்சு வார்த்தை நடத்தி, கடந்த சில நாட்களுக்கு முன்பு இலங்கை நீதிமன்றம் 63 மீனவர்களை விடுதலை செய்தது, இந்நிலையில் விடுதலை செய்யப்பட்ட 63 தமிழக மீனவர்களில், 15 பேர் கடந்த 21ம் தேதி விமானம் மூலம் சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

தொடர்ந்து நேற்று முன் தினம் 15 பேர் விமானத்தில் சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.



திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் மக்களுடன் முதல்வர் திட்டத்தின் கீழ் மனுக்கள் பெறப்படுவதை சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன் பார்வையிட்டார் .நகர் மன்ற தலைவர் புவனப்ரியா , துணைத்தலைவர் அகிலா சந்திரசேகர்,நகர்மன்ற உறுப்பினர்கள் டி.செந்தில். வரை.எஸ்.பிரகாஷ், ரஜினிசின்னா,திட்டக்குழு உறுப்பினர் இரா.சங்கர் மற்றும் அரசு அதிகாரிகள் உடனிருந்தனர்;.

### தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி வட்டத்தில் நேர்காணல் முகாம்!

# ரூ.15,67,820 மதிப்பீட்டில் 58 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்!

## எஸ்.எஸ்.பழநிமாணிக்கம் எம்.பி. வழங்கினார்!

தஞ்சாவூர், நவ. 26 -

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி வட்டம், செங்கமங்கலம் ஊராட்சியில், அருள்மிகு தெய்வங்க பெருமாள் திருக்கோயில் திடலில்; "மக்கள் நேர்காணல் முகாம்" தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம் முன்னிலையில் மாவட்ட ஆட்சித் தலைவர் தீபக் ஜேக்கப் தலைமையில்; நடைபெற்றது.

இம்முகாமில் ரூ.15,67,820 மதிப்பீட்டில் 58 பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்கி நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம்; தெரிவித்ததாவது: தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவுக்கிணங்க பொதுமக்களின் குறைகளை மனுக்களாக பெற்று தீர்வு காணும் நோக்கத்தில் ஒவ்வொரு மாதமும் ஒரு ஊராட்சியில் மக்கள் நேர்காணல் முகாம் நடைபெற்று வருகிறது. அந்த வகையில் தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி வட்டம், செங்கமங்கலம் ஊராட்சியில், அருள்மிகு தெய்வங்க பெருமாள் திருக்கோயில் திடலில் மக்கள் நேர்காணல் முகாம் நடைபெற்றது.

மேலும் சமூக பாதுகாப்பு திட்டத் தின் கீழ் 25 பயனாளிகளுக்கு ரூபாய்.34,200 மதிப்பீட்டில் உதவித் தொகையும், என்.எப்.எஸ்.எம் திட்டத்தின் கீழ் 2 பயனாளிகளுக்கும், பயோ பெர்டிலைசர் 2 பயனாளிகளுக்கும் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் திருமதி. இந்திராகாந்தி திட்டத்தின் கீழ் செங்கமங்கலம் சுயஉதவிக்குழுவிற்கு ரூபாய் 15,00,000 மதிப்பீட்டில நலத்திட்ட உதவிகளும், தோட்டக்கலைத்; துறையின் மூலம் மானியம் பெறும் 3 பயனாளிகளுக்கு ரூபாய் 33,625 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும் என மொத்தம் 58 பயனாளிகளுக்கு ரூபாய் ரூ.15,67,820 மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் இன்று வழங்கப்பட்டுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பழநி மாணிக்கம் தெரிவித்தார். முன்னதாக தோட்டக்கலைத் துறை சார்பில் வைக்கப்பட்டிருந்த கண்காட்சியினை மாவட்ட ஆட்சித் தலைவர் தீபக் ஜேக்கப், பேராவூரணி சட்டமன்ற உறுப்பினர் நா.அசோக் குமார் ஆகியோர் பார்வையிட்டார்கள்.

இந்நிகழ்ச்சியில் பேராவூரணி சட்டமன்ற உறுப்பினர் நா.அசோக்குமார், ஊராட்சி ஒன்றிய குழு உறுப்பினர்.உ.துரைமாணிக்கம், முன்னாள் ஒன்றிய குழுத் தலைவர் திரு. ராஜரத்தினம், வருவாய் கோட்டாட்சியர் திரு.அ.அக்பர் அலி, வட்டாட்சியர் திருமதி.தெய்வானை, செங்கமங்கலம் ஊராட்சி மன்ற தலைவர் .ஆர்.செல்வம் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



சேலத்தில் 17.12.2023 அன்று நடைபெற உள்ள 2 வது இளைஞர் அணி மாநில மாநாட்டிற்கு தமிழ்நாட்டு இளைஞர்களை நேரில் சந்தித்து மாநாட்டிற்கு அழைத்திடும் கன்னியாகுமரியில் தொங்கி தமிழ்நாடு முழுவதும் சுற்றுபயணம் மேற்கொள்ளும் இருசக்கர வாகனப் பிரச்சார பேரணி மயிலாடுதுறை மாவட்டத்திற்கு வருகை தரும் போது தரங்கம்பாடியில் மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., வரவேற்று பைக் பேரணியில் கலந்து கொண்டார். உடன் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள், கழகத்தினர் உள்ளனர்.